தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

ஐப்பசி 15, சுக்ல, திருவள்ளுவர் ஆண்டு—2020.

1989, அக்டோபர் 31, செவ்வாய்க்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் காலை 9-00 மணி யளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி".

உலகத்தில் உள்ள உயிர்கள் எல்லாம் மழையை நோக்கி வாழ் கின்றன ; அதுபோல் குடிகள் எல்லாம் அரசருடைய செங்கோலை நோக்கி வாழ்கின்றனர்.

1. முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி மறைந்த நாளை நினைவுகூர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதிப்பிற்குரிய பேரவை யினரே, இன்று முன்னாள் இந்தியப் பிரதமர் மதிப்பிற்குரிய திருமதி இந்திரா காந்தி அவர்களுடைய நினைவு நாள் ஆகும். இந்த நேரத்தில், அவருடைய சிறந்த தொண்டினையும், இந்தி யாவை உயர்த்துவதற்கு அவர் எடுத்துக்கொண்ட முயற்சி களையும், அவருடைய வாழ்வுச் சிறப்பையும் நோக்கி இந்தப் பேரவை அன்புடன் நினைவுகூர்கின்றது. நன்றி.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : தலைவரவர்களே......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேண்டாம். நான்தான் சொல்லிவிட்டேனே.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த நாட்டிற்காகத் தன்னுடைய இன்னு யிரைத் தியாகம் செய்த அன்னை இந்திரா காந்தி அவர்களுடைய படத்தை இந்த மண்டபத்திலே திறந்து வைக்கும்படி உறுப்பி னர்களின் சார்பிலே நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.